03.01.2023
அசல் வழக்கு எண்: 119/2018

வா.சா.1 சாட்சி சந்தோஷம் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

பிரதிவாதிகள் இருவரும் கணவன் மனைவி என்றால் சரிதான். சர்வே எண். 222/21 என்பதற்கு பழைய சர்வே எண். 252/2A2 என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி இடம் மொத்தம் 21 செண்டாக இருந்து அதில் 1ம் பிரதிவாதியின் முன்னோர்களுக்கு ஒரு பகுதி பாத்தியமாக இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புல எண். 222/21 ல் பிரதிவாதிகள் குப்பை, படப்பணி மற்றும் மாட்டுகொட்டம் அமைத்திருக்கிறார்கள் என்றால் சரிதான். அதற்கு அருகில் குளியல் அறை கட்டியுள்ளார்களா என்றால் சரிதான். மேற்கண்ட சொத்திற்கு பிரதிவாதிகள் சர்வே எண். 222/22 ல் உள்ள சந்தின் வழியாகத்தான் செல்லவேண்டும் என்றால் சரியல்ல. சர்வே எண். 222/22 என்பது சந்து என்று வருவாய் ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனை நாங்கள் ஏற்படுத்தி வைத்துள்ளோம். அதற்கும் பிரதிவாதிகளுக்கும் சம்பந்தமில்லை. வருவாய் ஆவணங்களில் மேற்படி சந்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி வருவாய் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும்.

எனது வீட்டின் கிழக்கு பக்கம் திண்னை பகுதியும் மாடிக்கு செல்லும் படிக்கட்டும் சந்தில்தான் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு மேற்கே உள்ள பகுதி பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எனது பங்காளிகளுக்கு பாத்தியப்பட்டதாகும். எனது வீட்டிற்கு தெற்கு பக்கம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து

உள்ளது என்றால் எனது பங்காளிகளுக்கு தற்போது அரசாங்கம் நிலம் ஆகிவிட்டது.

பிரதிவாதிகள் எனது மீது அசல் வழக்கு எண். 14/2021 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நீதிமன்றத்திலிருந்து ஆணையர் வந்து தாவா சொத்தை அளந்தார்கள் என்றால் சரிதான். அந்த ஆணையர் அறிக்கையில் நான் வீட்டு திண்ணையையும், படிக்கட்டையும் சந்தை ஆகிரமித்து கட்டியுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சந்து பகுதியில் ஆக்கிரமிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எனது இடம் 11 அடி என்று வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. பத்திரத்தை சீர்திருத்தம் செய்துவிட்டேன். நான் சொல்வதுபோல் சீர்திருத்தம் செய்ததற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

வா.சா.ஆ 2 ஆவணத்தில் கண்ட கிழமேல் 8 அடியை தவிர எனக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பயன்படுத்திவரும் சந்தை பிரதிவாதிகள் பயன்படுத்தவிடாமல் அசௌகரியம் ஏற்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்கண்ட விபரங்களை மறைத்து நான் தாக்கல் செய்துள்ள வழக்கு செல்லகூடியது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் நான் கிரையம் பெற்ற கிழமேல் 8 அடி அகலம்கொண்ட சொத்திற்கு மட்டுமே பொருந்தும் என்றாலும் அதற்கு கிழக்கே உள்ள சந்து பகுதிக்கும் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கு எந்த சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. சந்துபகுதி எனக்கு பாத்தியம் என்று எந்தவித பரிகாரமும் நான் கேட்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் விளம்புகை பரிகாரம் கேட்காததால் இந்த வழக்கு நிலைநிற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி

செய்யப்படவேண்டிய ஒன்று என்றால் சரியல்ல.